## தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம்,
## மயிலாடுதுறை

அ.சா.2 நாள் 16.06.2026

| SC. No. | 132/2024 | | |
|---|---|---|---|
| பெயர் | ராஜு | த/பெ. | ராமநாதன் |
| வயது | 27/26 | தொழில் | ஓட்டுநர் |
| கிராமம் | வள்ளுவகுடி | தாலுக்கா | சீர்காழி |

**1ம் எதிரி ஆஜர், 2ம் மற்றும் 3ம் எதிரிகள் ஆஜர் இல்லை. .**

சாட்சி அழைக்கப்பட்டு உறுதிமொழி செய்யப்பட்டது.

முதல் விசாரணை :–

நான் வள்ளுவக்குடியில் வசித்து வருகிறேன். நான் டிரைவராக பணிபுரிந்து வருகிறேன். அ.சா.1 அரவிந்தை தெரியும். அவர் எனக்கு தெரிந்த நபர். ஆஜர் எதிரி மற்றும் மற்ற எதிரிகளை தெரியும். 13.06.2019 அன்று நானும், அரவிந்தனும் திருவெண்காடு கோவிலுக்கு இருச்சக்கர வாகனத்தில் இரவு 8.30 மணிக்கு சென்றோம். ஆஜர் எதிரி குணசீலன் அரவிந்தனை தொலைபேசி மூலமாக நாங்கள் கோவில் உள்ளே இருந்தபோது திட்டிக்கொண்டிருந்தார். அப்போது கோவிலின் கிழக்கு வாசலுக்கு வரச்சொன்னதின் பேரில் நாங்கள் அங்கு சென்றோம். அப்போது ஆஜர் எதிரி குணசீலன் கையில் கத்தியை வைத்துக்கொண்டு உங்களைத்தாண்ட தேடிக்கொண்டிருந்தேன் என்று சொல்லி வெட்ட வந்தார். அப்போது அரவிந்தன் வலது கையால் தடுத்தார். தடுத்தபோது உள்ளங்கையில் அவருக்கு வெட்டுக்காயம் ஏற்பட்டது. பின்னர், இவருடன் இருந்த இன்னொரு நபர் ராஜேஷ் இரும்பு பைப்பை எடுத்த அரவிந்தன் தலையில் ஓங்கி அடித்தார். அகோரமூர்த்தி மற்றும் ரகுவீரன் கல்லால் அரவிந்தனை தலையிலும், காலிலும், கையிலும் அடித்தார்கள். நான் தடுத்தபோது என்னையும் தாக்க வந்தார்கள், நான் பயந்து சற்று விலகி நின்றிருந்தேன். காயம்பட்ட அரவிந்தனை சீர்காழி அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்றேன். பின்னர், மேல் சிகிச்சைக்காக

CJM, MAYILADUTHURAI.

ராஜு

சிதம்பரம் அண்ணாமலை அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனைக்கு அழைத்து சென்றேன். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

(எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை செய்யப்படவில்லை)

ராஜி

இத்திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல அதனை என்னால் தட்டச்சரிடம் சொல்லப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியிடம் படித்து காண்பித்து அவரால் சரியென ஒப்புக்கொள்ளப்பட்டது.

தலைமை குற்றவியல் நீதிபதி,
மயிலாடுதுறை.

## தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், மயிலாடுதுறை

அ.சா.3 நாள் 16.06.2026

| | | | |
|---|---|---|---|
| SC. No. | 132/2024 | | |
| பெயர் | மனோ | த/பெ. | அமிர்தலிங்கம் |
| வயது | 35/26 | தொழில் | சிவில் இன்ஜினியர் |
| கிராமம் | கீழஅகனி | தாலுக்கா | சீர்காழி |

**1ம் எதிரி ஆஜர், 2ம் மற்றும் 3ம் எதிரிகள் ஆஜர் இல்லை. .**

சாட்சி அழைக்கப்பட்டு உறுதிமொழி செய்யப்பட்டது.

முதல் விசாரணை :–

நான் கீழஅகனியில் வசித்து வருகிறேன். நான் சிவில் இன்ஜினியராக பணிபுரிந்து வருகிறேன். அ.சா.1 அரவிந்த் எனது தம்பி. அ.சா.2 ராஜு எனது தம்பியின் நண்பர். ஆஜர் எதிரி மற்றும் மற்ற எதிரிகளை சம்பவத்திற்கு பிறகு எனக்கு தெரியும். நான் சென்னையில் இருந்து விடுமுறைக்காக ஊருக்கு 12.06.2019 அன்று வந்திருந்தேன். 13.06.2019 அன்று இரவு சுமார் 10.00 மணியளவில் நான் வீட்டில் இருந்தபோது ராஜு எனக்கு போன் செய்து நானும், அரவிந்தனும் திருவெண்காடு கோவிலுக்கு சென்றிருந்தோம், அப்போது நான்கு நபர்கள் அரவிந்தை கத்தியாலும், ராடாலும், கல்லாலும் தாக்கி அவருக்கு இரத்தக்காயம் ஏற்படுத்தி இருப்பதாக என்னிடம் சொன்னார். அடிபட்ட அரவிந்தனை அங்கிருந்த எனக்கு தெரிந்த நெல்சன் மற்றும் நண்பர்கள் சீர்காழி அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு அழைத்து சென்றார்கள். நானும், எனது பெற்றோரும் சீர்காழி அரசு மருத்துவமனைக்கு சென்ற அரவிந்தனை பார்த்தோம். நான் பார்த்தபோது அரவிந்தனுக்கு வலது மணிக்கட்டு மற்றும் வலது உள்ளங்கையில் வெட்டுக்காயம் ஏற்பட்டிருந்தது. பின் மண்டை, தலை, முகம் மற்றும் உடம்பில் காயம் இருந்தது. அதன் பிறகு மேல்சிகிச்சைக்காக சிதம்பரம் அண்ணாமலை அரசு மருத்துவக்கல்லூரி

CJM, MAYILADUTHURAI.

மருத்துவமனைக்கு அழைத்து சென்று சிகிச்சையில் சேர்த்தோம். என்னை போலீசார் விசாரித்தார்கள்.

(எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை செய்யப்படவில்லை)

இத்திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல அதனை என்னால் தட்டச்சரிடம் சொல்லப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியிடம் படித்து காண்பித்து அவரால் சரியென ஒப்புக்கொள்ளப்பட்டது.

தலைமை குற்றவியல் நீதிபதி,
மயிலாடுதுறை.